## நெடுந்தீவு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2019 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நெடுந்தீவு பிரதேச சபையின் நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டிலுள்ள 05 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு புத்தகங்களில் காட்டப்பட வேண்டும் | பதில் தரப்படவில்லை. |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில் லை |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள்<br>அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில் லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்<br>(i) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 371 | சபையின் முன்னைய தவிசாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 156,215 பெறுமதியான முற்பணங்கள் கடந்த 18 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை ல. | உரிய விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டும் அறவிடமுடியாமல் உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | 2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 547,672 பெறுமதியான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | காலங்கடந்த வைப்புக்கள் முழுமையாக சீராக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| (ஈ) வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் | | | |
| (i) 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 06 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய சுற்று நிருபத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | இவ்வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | பொறுப்பாகவுள்ள அல்லது அதிகாரக் கையளிப்பின் கீழ் குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களால் பிணைப்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்று நிருபத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | பொறுப்பான உத்தியோகத்தர் களிடமிருந்து தவணை அடிப்படையில் பிணைப்பணம் அறவிடப்பட்டு வருகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 42,925 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,505,060 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 950,000 | - | 70,550 | - | 80,000 | - | 47,750 | - |
| வாடகைகள் | 1,026,000 | - | 863,250 | 132,149 | 884,800 | - | 1,441,720 | 152,050 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 117,500 | - | 189,299 | - | 83,500 | - | 620,210 | 7,190 |
| ஏனைய வருமானம் | 5,559,400 | - | 4,782,461 | 765,955 | 1,582,250 | - | 3,134,986 | 2,755,190 |
| | **7,652,900** | **-** | **5,905,560** | **898,104** | **2,630,550** | **-** | **5,244,666** | **2,914,430** |

❖ பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 5,244,666 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 5,905,560 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 660,894 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | இனிவரும் காலங்களில் வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபையினால் கடந்த 05 வருடங்களாக வருமானம் பட்டியல் இடப்படாமையினால் குறித்த வருமானங்கள் தொடர்பான நிலுவையினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதுள்ளது. | வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டில் கடை வாடகை நிலுவை ரூபா 30,550 பெறுமதியானது அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வாடகை நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் குத்தகை நிலுவை ரூபா 101,600 பெறுமதியானது அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் குத்தகை நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் எல்லைக்குட்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வியாபார உரிமத்துக்கான கட்டணம் ரூபா 88,000 பெறுமதியினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அனுமதிக்கட்டணங்களினை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ஏனைய வருமானங்கள் நிலுவை ரூபா 764,955 பெறுமதியானது அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் ஏனைய வருமானங்களை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கியங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை | பதில் தரப்படவில்லை. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் | பதில் தரப்படவில்லை. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக குறிப்பிட்ட பிரதேசம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுவதுடன் கழிவுகள் கொட்டப்படும் இடங்களில் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படுவதுடன் அவை கொட்டப்படும் இடங்களில் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட வேண்டும். | திண்மக்கழிவுகள் சேகரிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது |

| | | | |
|---|---|---|---|
| | மூடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | திண்மக்கழிவு சேகரித்தலின் போது மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படாது திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் பொது மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான பிரச்சினை காணப்படுவதுடன் அளவுக்கு அதிகமாக குப்பைகளை வாகனங்களில் வீதி வழியே குப்பைகள் கொட்டி செல்லப்படுகின்றது. | திண்மக்கழிவு சேகரித்தலின் போது சூழலிற்கு பாதிப்பு ஏற்படாதவாறு மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறைந்தளவான கழிவுகளே சேர்வதால் திறந்த வாகனத்தில் கொண்டு செல்லப்படுகின்றது. |
| (iii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய காலத்திற்கு காலம் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | சுகாதாரத் தொழிலாளிகளிற்கு காலத்திற்கு காலம் மருத்துவப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மருத்துவப்பரிசோதனை மேற்கொள்வதற்கு சுகாதார வைத்திய அதிகாரிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது கொசு எண்ணெய் அடிக்கப்பட்டு வருகின்றது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரித்தான 06 மயானங்களில் உடலை தகனம் | மயான வரியை அறவிட நடவடிக்கைகள் | உரிய நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| செய்வதற்கான அனுமதி பெறப்பட்டு தகனம் செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கான மயான வரியும் சபையினால் அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்களிற்கு மீள்மதிப்பீடு மேற்கொண்டு ஆதனவரி அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | நெடுந்தீவு பிரதேசத்தில் ஆதனவரி அறவிடுவது பொருத்தமான இல்லையென்பதால் ஆதனவரி அறவீடு செய்யப்படவில்லை. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 11 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டில் உள்ள 16 வாகனங்களினை உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வாகனங்கள் உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |

**3.4.2 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தண்ணீர் விநியோகிக்கும் பௌசரொன்று கடந்த 06 ஆண்டுகளாக சபையில் பயன்பாடின்றி காணப்பட்டிருந்தது. | சபையின் சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | குறித்த பௌசரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவைகளுக்காக சபையினால் பெறுகை வழிகாட்டி 4.2 இல் குறிப்பிட்டதற்கு அமைவாக ஒவ்வொரு வருடத்திற்குமான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைள் திட்டமானது அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக தயாரிக்கப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டின் மீண்டுவரும் செலவுகளான பயணச்செலவு, மூலதனச்செலவுகளை பழுதுபார்த்தல், மானியமும் உதவுதொகைகளும், ஓய்வூதியங்கள் என்பவை உண்மையான செலவிலிருந்து கூடுதலான வீதமானது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தது. இதனால் ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |